5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவினுடைய கீழ்க் கண்ட அறிக்கைகளை பேரவைக்கு வைக்கிறேன்.

(அ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை.

(ஆ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79-மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் (சிவில்) மீதான மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

(இ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1971-72 முதல் 1975-76 வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தொன்பதாம் அறிக்கை.

(ஈ) தமிழ்நாடு வேளாண்-தொழில்கள் கழகத்தின் செயல் முறை குறித்த மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை. போதிய அவகாசம் இல்லாததால் அச்சடித்த பிரதிகளுக்குப் பதிலாக படி எடுக்கப்பட்ட பிரதிகள் உறுப்பினர்களுக்கு வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு அறிக்கையின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் சட்ட மன்ற உறுப்பினர்களின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சடித்த பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

6. வரவு செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

அ. கோரிக்கை எண்: 15—காவல்துறை.

ஆ. கோரிக்கை எண் 16.—தீயணைப்புப் பணிகள்.

இ. கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

திரு. செ. இராமலிங்கம், : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே காவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது தமிழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நேற்று முதல் இங்கே பல்வேறு